திமுக சட்டத்துறை சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி இராயபுரம் அறிவகத்தில் திராவிடம் சாதித்தது என்ன ? என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.என்.ஆர்.இளங்கோ எம்.பி, தலைமை வகித்தார். என்.மருது கணேஷ், நிகழ்ச்சிக்கான ஏற்பட்டை செய்து வரவேற்புரையாற்றினார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ, முன்னிலை வகித்தார். கருத்தரங்கை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், சுப. வீரபாண்டியன், சி.வி.எம்.பி . எழிலரசன் எம்.எல்.ஏ, பேச்சாளர், நா.அருண், இரா.விடுதலை, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம்ஸ் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன்,சூர்யா வெற்றி கொண்டான், ஜெ.பச்சையப்பன், பி.ஆர்.அருள்மொழி, கே.சந்துரு, பெ.ரகு, டாக்டர் சந்திரபோஸ், கே.ஜே.சரவணன், மீஞ்சூர் கே.சுரேஷ், கே.மறைமலை, த.சிவராம், மற்றும் பலர் பங்கேற்றனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், பெஞ்சால் புயலால் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் மக்களுக்கு உணவுப் பொருட்கள், மளிகைப் பொருட்கள், அரிசி, காய்கறிகள், போர்வைகள், வேட்டி சேலைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கி துவக்கி வைத்தார். மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று, மக்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார். மாவட்ட கழக நிர்வாகிகள் ,மாநகர ஒன்றிய, நகர ,பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் நிவாரண பணிகள் மற்றும் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நீதிமன்றத் தீர்ப்புகளை மொழிபெயர்க்கும் பணிகளை

உச்சநீதிமன்றமே மேற்கொண்டுள்ளதால், தனியாக நிதி ஏதும் ஒதுக்கவில்லை!

மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்விக்கு – ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, டிச.9-

நீதிமன்றத் தீர்ப்புகளை மொழி பெயர்க்கும் பணிகளை உச்சநீதி மன்றமே மேற்கொண்டுள்ளதால், தனியாகநிதிஏதும்ஒதுக்கவில்லை என, தி.மு.க. எம்.பி. இரா.கிரி ராஜனின் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றகுளிர்காலக்கூட்டத்தொடரில், தி.மு.க. மாநிலங்களவை எம்.பி. ஆர்.கிரிராஜன், மொழிபெயர்ப்புத் துறையில் செயற்கைநுண்ணறிவுமூலம்உச்சநீதிமன்றம்மற்றும்உயர்நீதிமன்றங்களின்நடவடிக்கைகள்மற்றும் தீர்ப்புகளைமொழிபெயர்த்துவெளியிட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா, எவ்வளவுநிதி ஒதுக்கப்பட்டுள்ளது என ஒன்றிய சட்டம் மற்றும் நீதி துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்குப் பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் சட்டம் மற்றும் நீதித் துறையின் இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், Artifcial Intelligence (AI) எனப்படும் செயற்கை நுண்ணறிவுதொழில்நுட்பத்தைப் பயன்படுத்திநீதித்துறைஆவணங்கள்,தீர்ப்புகளைமொழிபெயர்க்கும் பணியை கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் உச்சநீதிமன்றம் மேற்கொண்டு வருவதாகவும், இந்த மொழிபெயர்ப்பு பணிகளை கண்காணிக்க உச்ச நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த குழுமாநிலமொழிகளில்மொழிபெயர்ப்பு செயல்முறைகளை உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் கொண்ட மாநில துணைக் குழுக்களுடன்தொடர்கூட்டங்களைநடத்தி வருவதாகவும் பதிலளித்துள்ளார். அந்தபணிகளைஉயர்நீதிமன்றங்களில்உள்ளஏ.ஐ. மொழிபெயர்ப்பு குழுக்கள்கண்காணித்துவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை 17 உயர்நீதிமன்றங்கள் மின்னணு உயர்நீதிமன்ற அறிக்கைகள்,சட்டஅறிக்கைகளை வெளியிடதொடங்கியுள்ளதாகவும் பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மத்திய மற்றும் மாநில சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றைமாநிலமொழியில் மொழிபெயர்த்துஅரசு இணையதளத்தில் வெளியிடுமாறு அந்தந்த மாநில அரசுகளை கோருமாறு, உயர்நீதிமன்றங்களின் AI குழுக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தமொழிபெயர்ப்புபணிகள் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நீதியைஅணுகுவதற்கானஒருபகுதியாகஇருப்பதால், உயர்நீதிமன்றங்களுக்கு முழு ஆதரவை வழங்கும்வகையில்மாநிலஅரசுகள்ஈர்க்கப்பட்டுள்ளதாகவும் இணை அமைச்சரின் பதிலில் கூறப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 25-ஆம் தேதி நிலவரப்படி, உச்சநீதிமன்றத்தின் 36,316 தீர்ப்புகள் இந்தி மொழியிலும், 42,457 தீர்ப்புகள் 17 மாநில மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளதாகவும், அவை உச்ச நீதிமன்ற இணைய தளத்தில் பதிவேற்றம்கிடைப்பதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து மொழிபெயர்ப்புபணிகளையும்உச்சநீதிமன்றமே மேற்கொண்டுள்ளதால், மொழிபெயர்ப்புக்கு என தனியாக நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை எனவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை செயல்பாடுகள் –

சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த சீராய்வுக் கூட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச.9

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 32வது மாதாந்திரசீராய்வுக்கூட்டம்நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறைமூலம்செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், 2021-2022-ஆம் நிதியாண்டு முதல் 2024-2025 நிதியாண்டு வரை சட்டமன்றத்தில்அறிவிக்கப்பட்டஅறிவிப்புகளின் தற்போதையநிலைகுறித்தும், குறிப்பாக ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் (Master Plan) கீழ் நடைபெற்று வரும் திருப்பணிகள், 1,000ஆண்டுகளுக்குமுற்பட்டதொன்மையான திருக்கோயில் திருப்பணிகள், கிராமப்புற மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகள், ரூ.1 கோடிமதிப்பீட்டிற்குமேல்நடைபெற்று வரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகள் மற்றும் நில அளவை பணிகள் குறித்தும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், புதிய திருத்தேர்கள் உருவாக்கும்பணிகள், மராமத்துபணிகள் மற்றும் திருத்தேர் கொட்டகைகள் அமைக்கும் பணிகள், திருக்குளங்களை சீரமைக்கும் பணிகள், உலோகத்திருமேனிபாதுகாப்புஅறைகட்டுமானம், பசுமடங்களை மேம்படுத்துதல், மலைத் திருக்கோயில்களுக்கு கம்பிவட ஊர்தி மற்றும் மின் தூக்கிஅமைத்தல்போன்றபணிகளின் முன்னேற்றம் குறித்தும், திருக்கோயில்யானைகள்பராமரிப்பு, மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா ஆன்மிகப் பயணங்களின் செயல்திட்டம், திருக்கோயில்களில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவமையங்களின் செயல்பாடுகள், திருக்கோயில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின்நலன்சார்ந்ததிட்டங்கள், திருக்கோயில்க ளில் வழங்கப்படும் அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினைஉறுதிசெய்திடஅமைக்கப்பட்ட உணவு பாதுகாப்பு அலுவலர்களின் பணி முன்னேற்றம், திருக்கோயில்கள்சார்பில்நடத்தப்படும் பயிற்சிப் பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆகியவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு முனைப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு அனைத்துதரப்பினரிடத்திலும்மிகுந்த வரவேற்பைபெற்றுள்ளது. இந்துசமய அறநிலையத்துறை வரலாற்றில் இது வரை இல்லாத அளவிற்கு பல்வேறு திட்டங்களுக்கு அதிகளவில் அரசு மானியங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்கள். இந்த அரசு உங்களிடம் எதிர்பார்ப்பது அறிவிக்கப்பட்ட திருப்பணிகள் அனைத்தையும் நிறைவேற்றிட களஆய்வு மேற்கொண்டு விரைந்து பணியாற்றிட வேண்டும் என்பதைதான். எனவே, மண்டல இணை ஆணையர்களும், பொறியாளர்களும் சட்டமன்ற அறிவிப்புகளின்படி முழுவற்ற பணிகளைத் தவிர்த்து இதர அனைத்துப் பணிகளையும் குறித்த காலத்திற்குள் முடித்திட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் உயரதிகாரிகள் டாக்டர் பி.சந்தரமோகன், பி.என். ஸ்ரீதர், டாக்டர் இரா.சுகுமார், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சி, திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் கல்வியாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. ஆலோசனையின் பேரில், மீஞ்சூர் பேரூர் திமு கழகத்தின் செயலாளர் க.சு. தமிழ் உதயன் தலைமையில் மீஞ்சூர்,பேராசிரியர் அன்பழகன் நகரில் உள்ள 'லவ்' பவண்டேஷனில் தங்கியுள்ள முதியோர் மற்றும் ஆதரவற்ற சிறார்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மீஞ்சூர் பேருராட்சி துணைத் தலைவர் ப.அலெக்சாண்டர், அன்வர் பாஷா, வெங்கடேசன், திருமதி.ஜோதி, க.சு.தமிழ்ப்பிரியன், ஆனந்தன், கா.ராஜேஷ் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசுக்குட்பட்ட பல்கலைக்கழகங்களில்

எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன?

மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி!

புதுடெல்லி, டிச.9-

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமிஅவர்கள், ஒன்றியஅரசுக்கு உட்பட்டபல்கலைக்கழகங்களில் எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்று நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது கேள்வி எழுப்பினார்.

மேலும் 31.10.2024 வரை எத்தனை பணியிடங்கள் காலியாகஉள்ளனஎன்றும்,தற்காலிக ஆசிரியர்கள் எத்தனை பேர் நியமனம்செய்யப்பட்டுள்ளனர்?ஒன்றிய அரசு காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப திட்டமிட்டுள்ளதா? அப்படி இல்லையாயின்அதற்கானகாரணம் என்ன என்றும், மேலும் கடந்த ஆண்டுகளில்எத்தனைஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்றும், SC/ST மற்றும் OBC ஆசிரியர்பணியிடங்களில்எவ்வளவு இடங்கள்காலியாகஉள்ளனஎன்றும், மேலும் இவ்வாறு அனேக ஆசிரியர் பணியிடங்கள் காலியாகஉள்ளநிலையில்பல்கலைக்கழகங்களின் கல்வித் திறனை பாதிக்காதா என்றும் அடுக்கடுக்கான கேள்விகளை ஒன்றிய கல்வித்துறை அமைச்சரிடம் கேட்டார்.

இதற்குஒன்றியகல்வித்துறை அமைச்சர் டாக்டர் சுகந்தா மஜும்தார் பின்வருமாறு பதிலளித்துள்ளார். அது வருமாறு:-

ஒன்றிய அரசுக்குட்பட்ட பல்கலைக்கழகங்களில் 5182 ஆசிரியர்பணியிடங்கள்காலியாகஉள்ளன என்றும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 28 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன என்றும், மேலும் நாடெங்கும் 740 எஸ்.சி. இனப்பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களும், எஸ்.டி. இனத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள் 464 ம், OBC பிரிவினருக்கான இடங்களில் 1,546 ம் காலியாக உள்ளன என்றும் கூறினார்.

ஆசிரியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறுவதாலும், சிலதங்கள் பணிகளைராஜினாமாசெய்வதாலும், மாணவர்களின்எண்ணிக்கைக்குஏற்பபுதியபணியிடங்கள் உருவாக்கப்படுவதாலும், ஒன்றியபல்கலைக்கழகங்களில்ஆசிரியர்பணியிடங்கள்சிலஇடங்கள் அதிகரிப்பதற்குக் காரணங்களாகும்என்றும், ஒன்றிய அரசு இப்பணியிடங்களுக்குத்தேவையான ஆட்களைக் கொண்டு நிரப்புவதற்கும் ஆண்டுதோறும் முறைப்படி நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. எஸ்.சி./எஸ்.டி. பிரிவினருக்கான இடங்களை நிரப்புவதற்காக சிறப்புதேர்வுகள் நடைபெற்று வருகின்றன என்றும் கூறினார்.

வட்டச் செயலாளர் அருள் கண்ணன் தலைமை! துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

103 'அ' வட்டத்தில் நல உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – பசும்பொன் ரவிச்சந்திரன் சிறப்புரை! எம்.கே.மோகன், ச.பரமசிவம் பங்கேற்பு!

சென்னை, டிச.9-

சென்னை மேற்கு மாவட்டம்அண்ணாநகர் வடக்குபகுதி103'அ'வட்டத்தில் கழக இளைஞர் அணிசெயலாளர்துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளைமுன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள்வழங்கும்விழா இன்று

(9-12-2024திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் மூவேந்தர் நகர், 7-வது மெயின் ரோடு அண்ணாநகரில்நடைபெறுகிறது.

103 'அ' வட்டச் செயலாளர் வழக்கறிஞர் அருள் கண்ணன் தலைமையில்சட்டமன்றஉறுப்பினர் எம்.கே. மோகன், பகுதி செயலாளர் ச. பரமசிவம், மாவட்ட நிர்வாகிகள் து. விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்அகஸ்டின் பாபு, கார்த்திக் மோகன், மாமன்ற உறுப்பினர்புஷ்பலதாஜெய்சங்கர், பி.ஜெய்சங்கர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிசெயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., தலைமைகழகபேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன், கழக இளம் பேச்சாளர்பூபதிஆகியோர்சிறப்புரை யாற்றுகின்றனர்.

இந்த விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். சேரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.டி.முருகன், கராத்தே ஆனந்த், நா. சந்திரபாபு, ராணிரவிச்சந்திரன், வழக்கறிஞர் ரஜினிகாந்த், மாவட்ட அமைப்பாளர்கள் ச. அசோக்குமார், ப.பிரகாஷ், துபாய் வி.ஆர். விஜய், யோகேஸ்வரி சுந்தரேசன், அரவிந்த்குமார், பகுதிகழகநிர்வாகிகள் பா. பிரபு, வி. சாய் செல்வம், கே.பி.சுரேந்தர், இரா. இளங்கோவன், மாமன்ற உறுப்பினர்கள் வசந்தி பரமசிவம், மெட்டில்டா கோவிந்தராஜ், வட்டக்கழகசெயலாளர்கள்ஏகாம்பரம், வழக்கறிஞர்பாபு, கோவிந்தராஜ், திருமலை, மாவட்டத் துணைஅமைப்பாளர்கள் குட்டி என்ற சுப்பிரமணியன், ஓம் பிரகாஷ், மணிகண்டன், கோபி கிருஷ்ணன், சந்திரகேசவன், கமல், பாலச்சந்தர், சம்மந்தா, ராகவ நாயகன் தயாளரங்கம் லோகேஷ், சரவணன் பிரபு கோகுல் மகேஸ்வரன், அமானுல்லா, சரவணன், மாவட்ட பிரதிநிதி எம்.வாசு செல்வம், வட்டக் கழக நிர்வாகிகள் சக்கரவர்த்தி, ராஜாராஜலட்சுமி, ராஜ்குமார், ரவி, செந்தில், சதீஷ்குமார், பாஸ்கர், வெங்கடேசன், கார்த்திக் ஆகியோர் கலந்துகொண்டுசிறப்பிக்கின்றனர்.

இதில் எஸ்.தாமஸ், டி.ஜீவா ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

விழாவில் கழகக் கொள்கைபரப்புபாடகர் ஆசிப் இறையன்பன் குத்தூஸ் இன்னிசை கச்சேரி நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்: பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் நிகழ்வுகள் விபரம்!

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

வ.எண்	வட்டம்	தலைமை	இடம்	சொற்பொழிவாளர்கள்
1	103 அ	அருள் கண்ணன்	மூவேந்தர் நகர் 7வது மெயின்ரோடு அண்ணாநகர்	பசும்பொன் ரவிச்சந்திரன் தலைமை கழக பேச்சாளர் பூபதி கழக இளம் பேச்சாளர்

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வை யாளர்கள், தலைமை செயற்குழு பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலா ளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நே. சிற்றரசு

செயலாளர், - சென்னை மேற்கு மாவட்டம்

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 125 அ வட்ட கழக சார்பாக கழகம் சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி வட்டச் செயலாளர் வே.வெற்றிவேல் தலைமையில் உணவு கிழக்குப் பகுதி செயலாளர் எஸ்.முரளி, மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் என். இளங்கோவன், டி. தினகர், செல்வி சௌந்தர்ராஜன், முருகேசன்,ஏ.ஆர். அமுல்ராஜ்,ரஞ்சிதம், சுரேஷ்,தர்மா,கமல், விஷால்,வினோத், சாமுவேல், சர்ச்சில், செல்வகுமார், சரவணகுமார், கார்த்திக்,ரமேஷ், சிவா,சுகுமார் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் பாகம் முகவர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கோட்டூர் அ. இராசசேகரன்

டிசம்பர் 9 (2012)

மாணவப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு செயல்பட்டவர். கோட்டூர் ஒன்றியச் செயலாளராக இருபது ஆண்டுகளும், திருவாரூர் மாவட்டம் உருவாகியபோது முதல் மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் பின்னர், மாவட்டக் கழகச் செயலாளராகவும், கழக விவசாய அணி இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சியின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர், தங்கமாக விளங்கியவர்" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்

தி.மு.க.